Registered as a Newspaper

பக்கங்கள் 16+4

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 176

ஞாயிற்றுக்கிழமை 21 மே 2023

வைகாசி 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# புலிகளை கொழும்பில் நினைவேந்த கைகட்டி நாம் வேடிக்கை பார்க்கோம்



## வடக்கு – கிழக்கில் நினைவேந்தியோரையும் சிறையில் தூக்கிப்போடவேண்டும்



விமல், சரத் வீரசேகர கொந்தளிப்பு

**கொழும்பு, மே 21**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்ற பெயரில் புலிகளை நினைவுகூருகின்றனர். வடக்கு - கிழக்கில் நினைவேந்தல் நடத்தியவர்களைக் கைது செய்து சிறையில் போடவேண்டும். இந்த நிலையில் கொழும்பில் நினைவேந்தல் நடத்த இவர்களுக்கு யார் அனுமதி கொடுத்தது? இவர்கள் இவ்வாறு செய்வதை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்கோம் - என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்தனர்.**

»04

## இரு மனதுடன் தமிழ்க் கட்சிகள் பேச்சில் பங்கேற்கக்கூடாது

மஹிந்த அறிவுரை



கொழும்பு, மே 21

தமிழ்க் கட்சிகள் ஒரு மனதாக பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும். இரு மனநிலையில் பேச்சில் பங்கேற்கக் கூடாது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். »04

## மாணவனைத் தாக்கி ரிக்ரொக்கில் காணொலி

சாகசம் காட்டியவர்கள் கைது

வவுனியா, மே 21

வவுனியாவில் பிரபல பாடசாலையில் கல்வி பயிலும் மணவர்கள் சிலர் இணைந்து, சக மாணவனை வீதியில் வைத்து தாக்கி அதனைப் பதிவு செய்து ரிக்ரொக்கில் வெளி »04

வடக்கு ஆளுநர் சார்ள்ஸுக்கு எதிரான

## போராட்டங்களுக்கு நீதிமன்றம் கட்டுப்பாடு

முல்லைத்தீவு, மே 21

மீண்டும் வடமாகாண ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ள திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் »04

காரைக்கால் - காங்கேசன்

## பயணிகள் கப்பல்சேவைக்கு இந்திய அனுமதி இன்னுமில்லை

கொழும்பு, மே 21

இந்தியாவின் காரைக்காலுக்கும், இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை இந்த மாதம் நடுப்பகுதியில் »04

உலகிலேயே

## குறைந்தளவு புவியீர்ப்பு விசை இலங்கையின் தென்பகுதியே

நாஸா அறிவிப்பு

கொழும்பு, மே 21

உலகிலேயே மிகக் குறைந்தளவு புவியீர்ப்பு விசை கொண்ட வலயமாக இலங்கையின் தெற்கு பகுதியை நாஸா அறிவித்துள்ளது. »04



## மலையக மக்களுக்காக யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 21

மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப் பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அவர்களின் உரிமைகளை வலியுறுத்தி »04

## ஜப்பானிடம் பணம் வாங்கி மகாவிகாரைப் பல்கலைக்கழகம்

பௌத்த பீடங்களிடம் ரணில் உறுதிமொழி விரிவு - பக். 04

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்துழைப்புக் கிடைத்தால் அரசியல் தீர்வு விரைவில்!

## ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, மே 21**
**தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. தீர்வை விரைந்து பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கு மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பமும் இதுவாக உள்ளது. எனது விருப்பமும் அதுவே.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை. அதுதொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியளிக்க தமிழ்க் கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை எனக்கு வழங்கவேண்டும்.

தீர்வை நாம் விரைந்துகாண தமிழ்க் கட்சிகளுடனான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது- என்றார். (ச-22)



## நல்லூர்க் கந்தன் உற்சவம் ஆயத்தக் காளாஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மே 21
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகரசபைக்கு ஆயத்தக் காளாஞ்சி வழங்கும் பாரம்பரிய நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை யாழ். மாநகரசபையில் நடைபெற்றது.

அலங்காரக் கந்தன் எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிகு நல்லூர்க் கந்தன் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளன.

அதனை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகரசபைக்கு ஆயத்தக் காளாஞ்சி வழங்கிவைக்கப்பட்டது. (ச-66)

## புதிய நியமனங்கள்!

கொழும்பு, மே 21
அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் மற்றும் ஆறு அரச நிறுவனங்களின் தலைவர் நியமனங்களுக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் புதிய செயலாளராக யமுனா பெரேராவின் நியமனத்துக்கும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ. எஸ்.சமரதிவாகரவின் நியமனத்துக்கும் உயர்பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

மக்கள் வங்கியின் தலைவராக சுஜீவ ராஜபக்சவின் நியமனத்துக்கும், இலங்கை அணுசக்தி சபையின் தலைவராக பேராசிரியர் எஸ்.ஆர்.டி.ரோசாவின் நியமனத்துக்கும், இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ரத்னசிறி கலுபஹனவின் நியமனத்துக்கும், மத்திய பொறியியல் ஆலோசனை நிறுவனத்தின் தலைவராகப் பொறியியலாளர் ஏ.கல்கெடியவின் நியமனத்துக்கும், பகிரங்க அரங்காட்டுகைச் சபையின் தலைவராக ஸ்டெல்லா மாரப்பனவின் நியமனத்துக்கும், இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக ஜயந்த விஜயரத்னவின் நியமனத்துக்கும் நாடாளுமன்ற உயர்பதவிகள் தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது. (ம)

### தமிழர் உரிமைப் போராட்டத் தீர்வுக்கான

# காலம் கனிந்து வரும்போது தாழியை உடைக்கக்கூடாது

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 21
எந்தவொரு இன விடுதலைப் போராட்டமும் எடுத்த எடுப்பில் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் வரலாறு. இப்போது நமக்கான காலம் கனியத் தொடங்கியிருக்கின்றது. அதைச் சிதைத்துவிடாமல் பலப்படுத்திப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

போர் முடிந்து 14 ஆண்டுகளாகின்றது. தமிழர் உரிமைப் போராட்டம் இன்னும் தீர்வைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. தமிழர் தரப்புத் தலைமைத்துவம் இன்னும் வலுப்பெற்று தமிழினத்துக்காக உயிர்நீத்த அத்தனை தியாகிகளினதும் கௌரவம் பேணும் தரத்தில் உரிமைக்குரலை உயர்த்தவில்லையாயினும் மக்களின் இடைவிடாத சாத்வீகப் போராட்டம் இன்னும் இடைவிடாது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமே இன்றளவும் நமக்கிருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் சுடரை அணைத்துவிடும் செயற்பாடுகளில் இப்போது சிலர் இறங்கியிருக்கின்றார்கள் என்பதுதான் வேதனையானது.

போர் முடிந்தகையோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதில் பல எதிர்ப்புகள் இருந்தன. காலம் செல்லச் செல்ல தமிழர் போராட்டத்தில் இருந்த நியாயத்தை பெரும்பான்மை மக்கள் புரிந்துகொள்ளும் சூழலை காலம் மெல்ல மெல்ல ஏற்படுத்தியிருந்தது. மக்களின் வேதனையும், உயிரிழப்பின் துன்பமும் மாறாதவடுவானதால் அதை நினைவு கூர்தல் பிழையல்ல என்ற நிலைப்பாட்டுக்கு பெரும்பான்மை மக்களில் நியாயமாகச் சிந்திக்கும் மக்கள் வரத் தொடங்கியிருக்கின்றது.

தமிழர் கோரிக்கை நியாயமானது என்றும் ஏதேனும் தீர்வு அவர்களின் நியாயமான குரலுக்கு அளிக்கப்படுவதே தர்மமும் அறமும் என்றுகாலம் கனியத் தொடங்கியிருக்கும் பொழுதில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளின் பெயரால் சிலர் முதிர்ச்சியற்ற சுயநல அரசியலைச் செய்ய முனையும் போதுதான் தமிழர் போராட்டம் கொச்சைப்படுத்தப்படும் நிலைதோற்றம் பெறுவதோடு, மீளவும் இனங்களுக்கு இடையேயான புரிதலை இனவாதமாக மாற்ற சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கும் சிலருக்கு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பொரளையில் இருந்துதான் அதுவும் கனத்தை மயானத்தில் இருந்துதான் 1983 ஜூலைக் கலவரம் ஏற்பட்டத் தூபமிடப்பட்டது. 40 ஆண்டுகளை நெருங்குகின்றவேளையில் மீளவும் அதே இடத்தில் இருந்து ஒரு அனர்த்தத்தை ஏற்படுத்த வழியேற்படுத்திக் கொடுக்க சிலர் முனைவது பேரினவாதத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தூண்டும் செயற்பாடேயாகும்.

வடக்கு- கிழக்கில் நினைவேந்தல் ஒவ்வொரு முறையும் பல்வேறு தடைகளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டே வந்தது. அதைத் தடுக்க படைத்தரப்பு சட்டம் என்ற ஆயுதத்தைத்தான் தூக்கி நின்றது. இப்போது கொழும்பில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைத் தடுக்க முயன்ற நபர்கள் இனவாதத்தைக் கையிலெடுக்கவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் கொச்சைப்படுத்தவும் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஒன்று நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இம்முறை தமிழர் தரப்பு இனவாதத் தீயின் வாய்க்குள் வீழ்ந்து விடாமல் கவனமாகச் செயற்படவேண்டிய தருணமிது. சர்வதேசத்தின் பிடிமானம் இன்னும் முழுமையாகத் தளர்ந்துவிடவில்லை. அடுத்த தேர்தல் ஒன்று வரும் போது தமிழர் உரிமைக்கான தீர்வுத்திட்டம் நிச்சயம் வலுவான கோரிக்கையாக முன்வைக்கப்படும் வாய்ப்புகள் முகிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் அதற்குத் தடைக்கற்களைப் போடும் வேலையைச் செய்யக் கூடாது- என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரூடோவின் கூற்று துருவமுனைப்பானது

## இலங்கை அரசாங்கம் நிராகரிப்பு

**கொழும்பு, மே 21**

**இலங்கையில் நிகழ்ந்த தமிழினப் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு கனேடியப் பிரதமர் வெளியிட்ட கருத்தை அடியோடு மறுத்து நிராகரித்த இலங்கை அரசாங்கம், இத்தகைய அறிவிப்புக்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக அமைதியின்மையையும் வெறுப்பையும் வளர்க்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் உள்ளதாவது:

தற்போது நாடு எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பொருளாதார உறுதித்தன்மை, மீட்சி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தல் ஆகியவை குறித்து இலங்கை அரசு எச்சரிக்கையுடன் செயற்படுகிறது.

ஒரு தேசத்தின் தலைவரின் இத்தகைய பொறுப்பற்ற மற்றும் துருவமுனைப்பு (உருமாற்றவியல்) ரீதியான அறிவிப்புக்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக அமைதியின்மையையும் வெறுப்பையும் வளர்க்கும்.

தவறான தகவல்களையும் வெறுப்புணர்வையும் பரப்பி, தவறான கதையை கனடாவில் அங்கீகரிக்கும் அரசியல் உந்துதல் - வேண்டுமென்றே கட்டமைக்கப்பட்ட 'இனப்படுகொலை' குறித்த ஆதாரமற்ற கட்டுக்கதை ஆகியவற்றை இலங்கை நிராகரிக்கின்றது.

இது 'உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்' என்ற கனேடியப் பிரதமரின் குறிக்கோளுக்கு முற்றிலும் முரண்.

நீண்டகால இருதரப்பு மற்றும் அபிவிருத்திப் பங்காளியான கனடாவுடன் பரஸ்பர மரியாதையுடன் ஈடுபடவே விரும்புகின்றோம்.

கனடாவின் அறிவிப்புக்கள் எமது மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் செழிப்பை உறுதிப்படுத்த வேண்டும். தேசிய நலனுக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது என கனடாவிடம் வேண்டுகோள் விடுகின்றோம்.- என்றுள்ளது.

'இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் போது கொல்லப்பட்டவர்களுக்காக கனேடிய அரசாங்கம் தொடர்ந்தும் குரல் கொடுக்கும். அவர்களுக்கு நீதி கோரிப் போராடும்' என்றவாறாக ட்ரூடோ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# சதொச வழக்கு: ஜோன்ஸ்டன் விடுதலை

கொழும்பு, மே 21

லங்கா சதொச வழக்கிலிருந்து ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவையும், மேலும் இருவரையும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விடுதலை செய்துள்ளது.

உள்நாட்டு வர்த்தக அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடமையாற்றிய காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் சதொச ஊழியர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர். அடிப்படை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்தார். (ச-இ)

# இலங்கையில் இனப்படுகொலையே ஏற்றுக்கொள்ளவேண்டும் பிரிட்டன்

## பிரதமர் ரிஷியிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 21

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரிட்டன் அரசாங்கம் ஏற்று அறிவிக்கவேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர், இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்குத்தொடரலுக்கான சர்வதேச நிலையத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை உள்ளடக்கி 900க்கும் மேற்பட்டோரால் கையெழுத்திடப்பட்ட மனுவையும் அவர்கள் அந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு 14 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை நினைவுகூருகின்றோம். இருப்பினும் இன்னமும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்படவில்லை. இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை முன்னிறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணையனுசரணை வழங்கியதன் மூலம் தமிழ்மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக பிரிட்டன் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.

அதேபோன்று தற்போது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு வருகின்றது என்பதை பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திவருவதையும் வரவேற்கின்றோம்.

இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதையும், மே மாதம் 18ஆம் திகதியை தமிழினப்படுகொலை நினைவு நாளாகப் பிரகடனப்படுத்துவதையும் முன்னிறுத்தி கடந்த ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமையை உலகளாவிய ரீதியில் வாழும் தமிழ்மக்களும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மாரும் பெரிதும் பாராட்டினர்.

நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை அத்தீர்மானம் வழங்கியது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுமாறு உங்களிடமும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் வலியுறுத்துகின்றோம். தேவையேற்படும் பட்சத்தில் இவ்விவகாரம் தொடர்பில் பிரிட்டன் தனியாகவோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள்ளது. (ம)

# யாழ்.பல்கலையில் பேராசிரியர்களாக மூவர் பதவியுயர்வு



கலாநிதி திருமதி எஸ்.எம்.சி. மகேந்திரன் அலோசியஸ்



கலாநிதி பூ.ஐங்கரன்



கலாநிதி கே.சூரியகுமார்



பேராசிரியர் என் கெங்காதரன்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். அத்தோடு பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அதற்கமைய முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி எஸ்.எம்.சி.மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ.ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.சூரியகுமார் விவசாயப் பொருளியல் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனிதவள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும், மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என்.கெங்காதரன், மனித வள முகாமைத்துவத் துறைப் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்படுவதற்கு தெரிவுக்குழு வழங்கிய பரிந்துரைக்கு பேரவை அங்கீகரித்துள்ளது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம், நகை திருட்டு

யாழ்ப்பாணம், மே 21

சங்குவேலியிலுள்ள வீடொன்றில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணமும், அரைப்பவுண் மோதிரமும் திருட்டுப் போயுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் வீட்டார் வெளியில் சென்றுள்ளனர். மூதாட்டி ஒருவர் மாத்திரம் வீட்டில் இருந்துள்ளார்.

வீட்டார் திரும்பி வந்து பார்த்தபோது அறையினுள்ள அலுமாரிக் கதவு நுட்பமான முறையில் திறக்கப்பட்டிருப்பதும், அதனுள் வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணமும் அரைப்பவுண் மோதிரமும் திருட்டுப்போயிருந்தமை தெரியவந்தது.

வீட்டிலிருந்த மூதாட்டிக்கு இது தொடர்பில் எதுவும் தெரியாத நிலையில் வீட்டுக்கு வழமையாக வந்து செல்லுவோர் மீது சந்தேகம் எழுந்துள்ளாக மானிப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-ஒ.125)

## புலிகளை...

கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்பு வெளியிட்டமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தனர்.

**சரத் வீரசேகர**

'நினைவேந்தல் நிகழ்வுகளை தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கில் நடத்துவதே குற்றம். இந்த நிலையில் அந்த நிகழ்வை தெற்கில் நடத்த தமிழர்களுக்கு அனுமதியைக் கொடுத்தது யார்? நினைவேந்தல் என்ற பெயரில் புலிப் பயங்கரவாதிகளையே தமிழ் மக்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர். இந்த நிகழ்வை அவர்கள் நாடெங்கும் பகிரங்கமாக நடத்த முற்படுவதை அனுமதிக்கமுடியாது. கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேவேளை வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் எந்தப் பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வை தமிழ் மக்கள் பகிரங்கமாக நடத்துவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். தமிழ் மக்கள் விரும்பினால் போரில் உயிரிழந்த தமது உறவினர்களை தத்தமது வீடுகளில் நினைவேந்தட்டும்' - என்றார்.

**விமல் வீரவன்ஸ**

'இறுதிப் போரில் உயிரிழந்த புலிகளை இந்தமுறை வடக்கிலும், கிழக்கிலும், கொழும்பிலும் நினைவேந்திய அனைவருக்கும் எதிராகச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நல்லாட்சி என்ற பெயரில் நடத்தப்பட்ட ஊழல் மோசடி ஆட்சியால் புலிகளை நினைவேந்த அரசு அனுமதி வழங்கியிருந்தது. அந்த நல்லாட்சியின் பிதாமகன்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு புலிகளை எந்தப் பகுதிகளிலும் சுதந்திரமாக நினைவேந்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த அனுமதியை வழங்கியது யார்? அமைச்சரவை வழங்கியதா அல்லது நாடாளுமன்றம் வழங்கியதா? விசித்திரமான இந்த ஆட்சியில் எதுவும் நடக்கலாம். ஆனால், நாங்கள் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டோம் என்பதை ஆட்சியாளர்களிடம் தெரிவித்துக்கொள்கின்றோம். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை ஜனாதிபதிக்கு விளங்கும்' - என்றார். (அ-ஒ.5,22)

## இரு மனதுடன்...

ஜனாதிபதி ரணிலுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்புத் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'பேச்சு வெற்றியடையவேண்டும் என்ற நோக்குடன் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்கவேண்டும். அதைவிடுத்து வேண்டாவெறுப்புடன் எதிரணியின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பேச்சு தோல்வியடையும் என்ற எண்ணத்துடன் தமிழ்க் கட்சியினர் பங்கேற்றால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் காலமும் பின்தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கும். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரு மனநிலையுடன்தான் பேச்சுக்கு வந்தார்கள். அந்தப் பேச்சுக்கள் துரதிர்ஷ்டவசமாக இடைநடுவில் நின்றுபோயின. ஜனாதிபதியுடனானதற்போதைய பேச்சு வெற்றியளிக்க வேண்டும் என்பதுதான் ஆளும் கட்சியினராகிய எமது விருப்பம். இதற்கு எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்' - என்றார். (அ-ஒ.22)

## மாணவனைத்...

யிட்டுள்ளனர். வவுனியா, வைரவப் புளியங்குளம் வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாணவனை தலைக்கவசம், தடிகளால் சரமாரியாகத் தாக்கி அதனை காணொலியாகப் பதிவு செய்து ரிக்ரொக்கில் வெளியிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளான். வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு மாணவர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மாணவர்களை பொலிஸார் தேடிவருகின்றனர். (அ-ஒ.110)

## குறைந்தளவு...

புவியீர்ப்பு விசையின் வேறுபாடுகள் தொடர்பில் நாஸா நிறுவனத்தால் பல வருடங்களாக ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. உலகின் அனைத்து பாகங்களிலும் புவியீர்ப்பு விசை ஒரே அளவாக இருக்காதென்பதை நாஸா கணித்துள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் புவியீர்ப்பு விசையில் உள்ள வேறுபாடுகளை ஆய்வு செய்து, செயற்கைக்கோள் தரவுகள் மூலம் நீரின் அடர்த்தியைக் கணக்கிட்டு நாஸாவால் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

உலகின் மிகக் குறைந்த ஈர்ப்பு விசை கொண்ட இடங்களாக இலங்கையின் தெற்கு, மாலைதீவின் கிழக்கே இந்திய பெருங்கடல் மற்றும் ஹட்சன் விரிகுடாவுக்கு அருகில் உள்ள கனடாவின் வட பகுதி என்பவற்றை நாஸா அறிவித்துள்ளது. (அ-ஒ.இ)

## பயணிகள்...

ஆரம்பமாகும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் இந்திய வெளிவிவகார அமைச்சின் இறுதிக்கட்ட அனுமதிகள் வழங்கப்படாமையால் சேவைகளை ஆரம்பிப்பதில் காலதாமதம் நீடிப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பயணிகள் கப்பல்சேவை முன்னதாக ஏப்ரல் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மே 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கூறப்பட்டிருந்தது. தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுமதி எப்போது கிடைக்கும் என்பது தெரியாததால், கப்பல் சேவை ஆரம்பிப்பதில் இழுபறி நீடிக்கின்றது.

இதேவேளை - காரைக்கால் துறைமுகத்தை இந்தியாவின் அதானி குழுமம் பொறுப்பேற்றுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுமதி கிடைத்தாலும், காரைக்கால் துறைமுகத்தின் ஆரம்பக்கட்ட உட்கட்டுமான மறுசீரமைப்புப் பணிகள் முடிந்த பின்னரே, பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் எதிர்வரும் 5ஆம் திகதி சென்னை துறைமுகத்திலிருந்து ஆயிரத்து 600 சுற்றுலாப் பயணிகளுடன் 'எம்ப்ரஸ்' என்ற பயணிகள் கப்பல் இலங்கையை நோக்கி வருகை தரவுள்ளது.

இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை, திருகோணமலை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லவுள்ளது. 3 நாள் சுற்றுலாவுக்காக இந்திய ரூபாவில் 85 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

## ஜப்பானிடம்...

மகாவிகாரைப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கு ஜப்பானின் உதவியை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேரவாத பௌத்தம் தொடர்பிலான கற்கை செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக மேற்படி பல்கலைக்கழகத்தை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஜப்பானுக்கான தனது பயணத்தின்போது அதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்காக தாய்லாந்து, பூட்டான் போன்ற பௌத்த நாடுகளின் உதவிகளையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்றுச் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டதன் பின்னரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதி நவீன நகரமாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, கண்டி மாநகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இவ்வருடத்தில் ஆரம்பிக்க உள்ளதாகவும், நாட்டின் அனைத்து மகாணங்களினதும் அபிவிருத்தித் திட்டங்களை விரையில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி பழைய சிறைச்சாலை மற்றும் தபால் நிலைய கட்டடத் தொகுதிகளின் சிறப்பம்சங்களைப் பாதுகாக்கும் வகையில் அப்பகுதிகளை சுற்றுலாப் பிரயாணிகளின் அவதானத்தை ஈர்க்கத்தக்க இடங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டமிடல்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில், கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றியடைந்ததன் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்பாடான நிலைக்கு கொண்டு வர முடியும் என நான் நம்புகிறேன். அதிகளவான சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வரவேண்டும். திருகோணமலை புதிய நகரத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கண்டிப் பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை இவ்வருடத்தில் ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதன் பின்னர் யாழ்ப்பாண பெருநகர அபிவிருத்தி ஆரம்பமாகும் - என்றார். (அ-ஒ.இ)

## போராட்டங்களுக்கு...

யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த நிலையில் அவரது நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னைய ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் ஆதரவாளர்கள் என்று நம்பப்படும் 6பேர் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து அவர் நாளை பதவியேற்கும்போதும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்து யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊடகவியலாளர் சுவர்ணலிங்கம் வர்ணன், சிவசேனா அமைப்பின் சிறீந்திரன், இலங்கை சைவ ஆதீன நிலையத்தின் தலைவர் விபுலானந்தன் சுவாமி ஆகியோரின் பெயரைக் குறிப்பிட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நிபந்தனைகளுக்குட்பட்டு போராட்டம் நடத்த முடியும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதியை மறிக்கக் கூடாது. ஆளுநர் அலுவலகச் சூழலில் பரப்புரை முன்னெடுக்கக் கூடாது. ஆளுநர் அலுவலகத்தில் பணியாற்றுபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது. ஆளுநரின் பதவியேற்புக்கு வரும் எந்தவொரு அதிகாரிக்கும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது. (அ-ஒ.26)

## மலையக...

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்னால் அமைதியான கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய கிறிஸ்தவ மன்றம் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது, மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தி செய்த நிலையில், அவர்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு பல்வேறு துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை பதாகைகளில் தாங்கியவாறு போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர். 'மலையக மக்கள் சுதந்திரமாக வாழ காணி வழங்கு', 'மலையக மக்களைச் சிதைக்க வேண்டாம்', 'பதவிகளுக்கு மலையக மக்களை விற்காதே', 'தோட்ட மருத்துவமனை அரசுடமையாக்கப்பட வேண்டும்', 'வியர்வை விதைத்த பூமி, உழைப்பாளர்கள் உரிமையான பூமி' போன்ற கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டம் நடைபெற்றது. சர்வ மதத் தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர். (அ-ஒ.23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீதிக்காக ஓர் ஆதரவுக்குரல்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது கொல்லப்பட்டவர்களுக்காகவும் மனிதஉரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் கனடா தொடர்ந்து நீதிகேட்கும். இந்தப் பயணத்தை கனடா ஒருபோதும் நிறுத்தாது என்று வெளிப்படையாகவே தெரிவித்தும் எச்சரித்தும் இருக்கின்றார் கனேடியப் பிரதமரான ஜஸ்ரின் ட்ரூடோ. போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை ட்ரூடோவும் அவர் தலைமையிலான கனடாவும் கொழும்பிடம் வலியுறுத்துகின்றமை இதுவொன்றும் முதல்முறையல்ல. கடந்த வருடம் கனேடிய நாடாளுமன்றத்தில், 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே. இலங்கை அரசாங்கம் அத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், 2009ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் மனிதஉரிமை மீறலுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கும் இராணுவப் பின்புலம் கொண்ட சுனில் ரத்னாயக்க மற்றும் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோருக்கும் பொருளாதாரத் தடைகளை விதித்து உத்தரவிட்டிருந்தது கனேடிய அரசாங்கம். ஆக, தமிழர்களுக்காக ஆத்மார்த்தமாக நீதிதேடும் பயணத்தின், ஒரு பகுதி நடவடிக்கைதான் முள்ளிவாய்க்கால் படுகொலை நாளில் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கை என்றும் இதற்கு அர்த்தம் கற்பிக்கலாம்.

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்று தமிழர்கள் நீண்டகாலமாகவே தீர்க்கமாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் இதற்கான நீதி இன்னமும் வழங்கப்பட்டாகவில்லை. குறைந்தபட்சம் இந்தப் போர்க்குற்றங்களுக்கான பரிகாரத்தை – நீதியைக் கண்டடைவதற்கான பொறிமுறைகள்கூட உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு – போர்க்குற்றங்களுக்கு ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவை காத்திரமான நடவடிக்கையொன்றை எடுத்து நீதியை வழங்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றபோதிலும் அந்தக் காத்திருப்புக்கான பதிலை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவை வரலாறு நெடுகிலும் தவறியே வந்திருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கு மாறிமாறி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் கால அவகாசங்கள், போர் தின்றுகொன்ற தமிழினத்தை மேலும் வதைத்தெறிகின்ற நிலையில், கனேடிய அரசாங்கத்தின் இந்த அதிரடி நடவடிக்கைகள் தமிழர்களின் மனக்காயங்களை நிச்சயம் ஆற்றுப்படுத்தும் மருந்திடும். ஆதலால், ஈழத் தமிழர்களின் விடயத்தில் கனேடிய அரசாங்கத்தை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும். கனேடிய அரசாங்கத்தின் தீர்மானங்களை அடுத்து, அவற்றை நீர்த்துப்போகச் செய்வதில் ராஜதந்திர ரீதியாக இலங்கை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனினும் அதற்கெல்லாம் இம்மியும் வளைந்து கொடுக்கும் தனம் கனடாவிடம் இருந்ததில்லை. முள்ளிவாய்க்கால் படுகொலை தினத்துக்கு, ட்ரூடோ வெளியிட்ட தற்போதைய அறிக்கையைத் தொடர்ந்தும்கூட கனடாவின் இலங்கைக்கான தூதுவரை அழைத்து அவருக்குப் பல்வேறு நெருக்குவாரங்களை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வழங்கியுள்ளார். ஆயினும், தன் நிலைப்பாட்டில் கனடா இம்மியும் தளம்பாமல் உறுதியாக நிற்கும் என்று ஆணித்தரமாக நம்பலாம்.

இறுதிப்போர் முடிவடைந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஆகின்றது. இதுவரை தமிழினம் எத்தனையோ முறையிடல்களை – கவனவீர்ப்புக்களை – நீதிக்கான கோரிக்கைகளை உலக நாடுகளிடமும் ஐக்கிய நாடுகள்சபை போன்ற 'நீதிக்கான பொது அமைப்புகளிடமும்' மாறிமாறி விடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மட்டும் ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 20க்கும் மேற்பட்ட தடவைகள் தமிழினம் ஏமாற்றப்பட்டிருக்கின்றது. தமிழினம் பறிகொடுத்த உயிர்ப்பலிகள் மென்போக்குத் தன்மையுடனேயே அணுகப்பட்டிருக்கின்றன. ஆனால், உண்மையில் ஏற்பட வேண்டிய மாற்றத்துக்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக்களுக்கும் கனடா கடந்த இரு ஆண்டுகளாகக் கட்டியம் செய்துகொண்டிருக்கின்றது. இந்தக் காத்திரமானதும் முதுகெலும்புத்தனம்மிக்கதுமான நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டு அவை செயலுருப் பெறுகின்றபோதுதான் இலங்கை போன்ற அரசாங்கங்களுக்கு எதிரான நீதியென்பது, கேந்திர முக்கியத்துவம் பிராந்திய நலன் என்பவற்றைத் தாண்டிக் கைக்கெட்டும். எனவே, இதுவிடயத்தில் தமக்கிருக்கும் கடமைகளை வல்லரசுகளாகவும் பிராந்திய வல்லரசுகளாகவும் தம்மை அடையாளப்படுத்தும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் உணரும்போதுதான் சிறுபான்மை மக்களின் இருப்பும் உறுதிப்படுத்தப்படும்.

### நாளொரு நல்வார்த்தை

"ஏழைகள் தங்களின் துன்பங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை என்ற முட்டாள்தனமான நம்பிக்கையை எவ்வளவு சீக்கிரம் நீக்கி விடுகிறார்களோ அவ்வளவு நல்லது" – அம்பேத்கர்



# தேர்தலைக் காலம் தாழ்த்தியதற்கு பரிசுதான் வடக்கு ஆளுநர் பதவி

## கிரியெல்ல கடும் காட்டம்; ஜனகவை பாதுகாக்கவும் முடிவு

**கொழும்பு, மே 21**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தினம் தீர்மானிக்கப்பட்டதிலிருந்து, அரசாங்கத்தின் தேவைக்கேற்ப தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அதன் உறுப்பினராகச் செயற்பட்ட பி.எஸ்.எம். சார்ள்ஸ் முழுமையான ஆதரவை வழங்கினார். அதற்கான அன்பளிப்பாகவே இன்று அவருக்கு ஆளுநர் நியமனம் வழ்ங்கப்பட்டுள்ளது இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்குவதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இந்த யோசனைக்கு எதிராகவே வாக்களிக்கும். அவர் மக்களுக்கு நியாயமான விலையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கே முயற்சித்தார். அதை விடுத்து எந்தத் தவறும் இழைக்கவில்லை. அவர் மக்களுக்கு வழங்கிய சேவைகளே தவறுகளாக சித்திரிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்கமுடியும் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் 27 சதவீதத்தால் குறைக்கமுடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்காகவே அரசாங்கம் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் என்ற பெயரில் அரசாங்கம் இவற்றை நியமித்திருந்தாலும், திரையின் பின்னால் கடும் அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன. சுயாதீன ஆணைக் குழுக்களின் செயற்பாடுகளை எதிர்கொள்ளத் தைரியம் இல்லாவிட்டால் அரசாங்கம் அவற்றை நியமித்திருக்கக் கூடாது - என்றார். (ம-இ)

# சிறு வர்த்தகர்கள் முன்னேற சட்டக் கட்டமைப்புத் தேவை!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, மே 21

சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை அடிமைகளாக மாற்றாமல் அவர்களது பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் கட்டமைப்பொன்றை அரசியல்வாதிகள் உருவாக்கவேண்டும் - இவ்வாறு சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் முன்னேற்றத்துக்கு வேறாக்கப்பட்ட தனிப் பிரிவொன்று செயற்படுத்தப்பட்டு தெளிவானதொரு கொள்கையுடன் வேலைத்திட்டத்தை உருவாக்கவேண்டும். இந்த வேலைத்திட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிப்பதுடன் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் வர்த்தகர்களின் நலனுக்காக முன்னிற்கும். இதனை ஒரு சட்டக்கட்டமைப்பினூடாக முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு பாதை திறக்கவேண்டும் - என்றார். (ச-இ)

**நாளை**

**22.05.2023**
**திங்கட்கிழமை**
**வைகாசி 08**

சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாகலமாக ஆரம்பமானது "தென்மராட்சி பிக் பாஷ் லீக்"

யாழ்ப்பாணம், மே 20

'உதயன்' ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடர் நேற்றுக் கோலாகலமாக ஆரம்பமானது.

வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தத் தொடரில் 10 அணிகள் பங்குபற்றவுள்ளன. 150 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. 150 வீரர்களின் பங்கேற்புடன் 4 வாரங்கள் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் சம்பியனாகவுள்ள அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 5 இலட்சம் ரூபா பரிசில் வழங்கப்படவுள்ளது. இரண்டாவது இடத்தைப் பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஆட்டநாயகன் விருது பெறும் வீரருக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ஆயிரம் ரூபா பணப்பரிசிலும், தொடர் ஆட்டநாயகன் விருது பெறும் வீரருக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 5 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் வழங்கப்படவுள்ளது. சிறந்த களத்தடுப்பாளர் மற்றும் 100 ஓட்டங்களைப் பெறும் வீரருக்குத் தலா 2 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும், வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது. 50 ஓட்டங்களைக் குவிக்கும் வீரருக்கு ஆயிரம் ரூபா பணப் பரிசிலுடன் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மட்டுவில் பைற்றர்ஸ் அணியும், நாவற்குழி பிக்வூற்றர் அணியும் மோதின. அதில் நாவற்குழி பிக்வூற்றர் அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் பார்த்தீபன் 30 ஓட்டங்களையும், சஜன்தீப் 12 ஓட்டங்களையும், துஷியந்தன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பிக்வூற்றர் அணி சார்பில் பந்துவீச்சில் எட்வின் 4 இலக்குகளையும், ஜீவராஜ் 2 இலக்குகளையும், கர்ணன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்வூற்றர் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக சத்தியன் 26 ஓட்டங்களையும், சுதா ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும், எட்வின் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் நுணாவில் டொமினேற்றர்ஸ் அணியும், நாவற்குழி பிக்வூற்றர் அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் நாவற்குழி பிக்வூற்றர் அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்வூற்றர் அணி 4 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. நாவற்குழி பிக்வூற்றர் அணி சார்பில் நிசாந்தன் 72 ஓட்டங்களையும், அஜந்தன் 25 ஓட்டங்களையும், சத்தியன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நுணாவில் டொமினேற்றர்ஸ் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக பிரிந்தன் 15 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் நாவற்குழி பிக்வூற்றர் அணி சார்பில் நிதர்சன், சத்தியன், சுமன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், நாவற்குழி பிக்வூற்றர் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் கில்லிஸ் அணி 5 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. சுப்பர் கில்லிஸ் அணி சார்பில் கஜிந்தன் 58 ஓட்டங்களையும், அருண் 44 ஓட்டங்களையும், சஜீபன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்வூற்றர் அணி 9.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக ரஜிகரன் 4 இலக்குகளையும், மதிவதனன் 3 இலக்குகளையும், அருண் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கைதடி போரேவர் அணியும், சாவா ஸ்பாட்டன் அணியும் மோதின. அதில் சாவா ஸ்பாட்டன் அணி 10 இலக்குகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக இலக்கியன் 27 ஓட்டங்களையும், கனிஸ்டன் 20 ஓட்டங்களையும், சுரேனுசன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன் அணி 4.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 77 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக தனுஸ்ராஜ் 38 ஓட்டங்களையும், மைத்திரி 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் டொமினேற்றர்ஸ் அணியும், கைதடி போரேவர் அணியும் மோதின. அதில் நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக டிலிச், ராஜ்குமார், கனிஷ்ரன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். டொமினேற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் இளங்குமாரன் 4 விக்கெட்டுக்களையும், ஜீவிதன் மற்றும் ஜதுர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டொமினேற்றர்ஸ் அணி 8.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அணி சார்பாக ஜீவிதன் 24 ஓட்டங்களையும், கவனிதன் 22 ஓட்டங்களையும், ஜதுர்சன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், மட்டுவில் பைற்றர் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் சஜீபன் 38 ஓட்டங்களையும், கஜிந்தன் 24 ஓட்டங்களையும், ரஜீகரன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களை மட்டுமே பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பில் பந்துவீச்சில் கவிராஜ், அருண், மதிவதனன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(எ)

# இந்தியா ஆயுதம் வழங்குகின்றதா?

## ஜனநாயகப் போராளிகள் கட்சியிடம் ரி.ஐ.டி. விசாரணை

இந்தியா விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றதா? ஆயுதம், பணம் என்பவற்றை வழங்கி மீள் உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றார்களா? என்று பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் தன்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு இந்தியா எவ்வாறான ஆலோசனைகளை வழங்குகின்றது? இந்தியா பணம் வழங்குகின்றதா? போன்றவற்றை இவர்கள் விசாரணைகளின்போது கேட்டிருந்தார்கள். இந்தியா, இங்கு என்ன செய்யுமாறு தங்களை பணித்துள்ளார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் கேட்டார்கள். முள்ளிவாய்க்கால் நினைவு தினம், தியாகி திலீபன் நினைவு தினம், மாவீரா நாள் நினைவு தினங்களை நீங்கள் எவ்வாறு செய்கின்றீர்கள்? பணம் யார் வழங்குகிறார்கள்? போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியிருந்தார்கள். இதற்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பின் மூலமே இத்தகைய விடயங்களை செய்கின்றோமேயொழிய எந்த ஒரு நாட்டினுடைய நிதிப் பங்களிப்பில் இத்தகைய நிகழ்வுகளை செய்வதில்லை என்பது தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்தியா உங்களுக்கு பணம் வழங்குகின்றதா? என்றும் கேட்டார்கள்.

இந்தியா விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றதா? ஆயுதம், பணம் என்பவற்றை வழங்கி மீள் உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றார்களா? என்றும் அவர்கள் கேட்டார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள், போராளிகள் மீது இவ்வாறு கட்டவிழ்த்துவிடப்படும் விசாரணைகள் தொடர்பில் மௌனம் காக்காது அதற்கு குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHOPPING MAYNIA

## 45% வரை தள்ளுபடி

2023 மே 18 முதல் 28 வரை

BUY ONLINE
Abans.com

**LG**
43" UHD TV
புதிய கேமிங் அம்சங்களுடன் துல்லியமான நேரடி காட்சிகளை அனுபவியுங்கள்.
43UP7550PTC
சாதாரண விலை ரூ.279,990
சேல் விலை ரூ. 239,990 | தள்ளுபடி ரூ. 40,000

**LG**
55" UHD TV
புதிய கேமிங் அம்சங்களுடன் துல்லியமான நேரடி காட்சிகளை அனுபவியுங்கள்.
55UP7550PTC
சாதாரண விலை ரூ.429,999
சேல் விலை ரூ. 379,999 | தள்ளுபடி ரூ. 50,000

**Abans**
போர்டபல் ஒடியோ / ஸ்பீக்கர்
சிறந்த பேஸ் ஒலியை அனுபவியுங்கள்.
RM-550
சாதாரண விலை ரூ.44,999
சேல் விலை ரூ. 39,999 | தள்ளுபடி ரூ. 5,000

**octa**
SANETRA 10.1 INCH TABLET
ஒன்லைன் கல்விக்கு மிகச்சிறந்தது
OCTA10
சாதாரண விலை ரூ.56,990
சேல் விலை ரூ. 37,990 | தள்ளுபடி ரூ. 19,000

**X-TIGI**
SMARTPHONE
A10S 3GB + 32GB
Black A10SBK | Blue A10SBL
சாதாரண விலை ரூ.54,990
சேல் விலை ரூ. 39,990 | தள்ளுபடி ரூ. 15,000

**LG**
இன்வெர்டர் வோஷர் ட்ரையர்
பெரிய குடும்பத்திற்கு மிகவும் உகந்தது.
39% வரை மின்சாரத்தை சேமிக்கிறது
Wash 19Kg | Dry 12Kg | 100% DRY
F2719RVTV
சாதாரண விலை ரூ.849,990
சேல் விலை ரூ. 699,990 | தள்ளுபடி ரூ. 150,000

ABSGDH

**LG**
இன்வெர்டர் வோஷர் ட்ரையர்
39% வரை மின்சாரத்தை சேமிக்கிறது
Wash 10.5Kg | Dry 7Kg | 100% DRY
ட்ரையர் சகிதம் FV1450H2K | ட்ரையர் இல்லாமல் FV1450S2K
சாதாரண விலை ரூ.529,990 இலிருந்து
சேல் விலை ரூ. 399,990 இலிருந்து | தள்ளுபடி ரூ. 130,000 இலிருந்து

**Abans**
செஸ்ட் பிரீஸர்
மின்சாரத்தை குறைக்கும் செயல்திறன்மிக்க வாயுவைக் கொண்டுள்ளது.
வறுத்தலை விளான், தெல்லிப்பளையில் வறுத்தலை விளான் அ.மி.த.க.பாடசாலைக்குச் செல்லும் வீதியில் பிரதான வீதியிலிருந்து (வல்லைவீதி) சிறிது தூரத்தில் நாலரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (CS/50424) AH-1

**077 920 9156, 077 421 1491**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 52 பரப்புக் காணி விற்பனைக்கு.

* யாழ்ப்பாணத்திலிருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* யாழ். நகரில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* நான்கு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

தொடர்பு: **077 259 0391**
**076 739 0413**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 84 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 பாதையுடன்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்

தொடர்பு: **076 4365 814**
**077 065 4525**

## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 56 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).

தொடர்பு: **076 911 9371**
**077 8748 135**

(CS 24858) A-1

## Nivithra நிவித்ரா அழகுக்கலை மற்றும் தொழில்பயிற்சி நிலையம்

Beauty Parlour & Training Academy (TVEC Approved & Accredited Center)

யாழ்ப்பாணத்தில் மகளிருக்கான புதிய பிரிவுகளுக்கான தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பிக்கின்றது.

- **NVQ4 சான்றிதழுக்கான கற்கை நெறிகள்**
  - அழகுக் கலை வல்லுநர் - NVQ4
  - சிகையலங்கரிப்பவர் - NVQ4
  - மணப்பெண் அலங்கரிப்பவர் - NVQ4
  - தையலாளர் - NVQ4
  - கேக் அலங்கரிப்பவர் - NVQ4



- **நிறுவன சான்றிதழுக்கான கற்கை நெறிகள்**
  - ஆரிவேக்
  - கம்பேஸ்ட் பூக்கள்
  - ஆங்கிலம்

சுயதொழிலாக வீட்டிலிருந்து தொழிலை ஆரம்பிக்கவும், தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கவும், இலகுவாக வேலை வாய்ப்புக்களினை உயர் சம்பளத்துடன் பெற்றுக்கொள்ளவும் வெளிநாடு செல்லும் பெண்கள் தொழில் செய்யவும் எமது NVQ4 கற்கை நெறிகளினைக் கற்றுப் பயனடையுங்கள்.

தொடர்பு:-
**077 771 2604, 077 25 33 507**
(வட்ஸ்அப், வைபர்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில். 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: **077 638 5683**
**076 755 8606**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

வேரை அறுத்தாலும் மரங்கள்
வெறுப்பை உமிழ்வதில்லை
அறுத்த நதியின் மேல் மரங்கள்
ஆனந்தப் பூச்சொரியும்

- வைரமுத்து

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (21.05.2023) சிகரம் : 147

# மதில் மேல் இருக்கும் ஆமைகள்?

நிலாந்தன்

மற்றொரு மே 18 கடந்து போய்விட்டது. இது பதினாலாவது மே18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது? மே 18 ஐத் தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ்க் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமைபோல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. வெளிக்களப்பயிற்சி நிலையப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கிப் போய்க்கொண்டிருக்க, ஏனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சிக் கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கிக் குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பதுபோல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?



மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாள்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது? ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக்கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்கதினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4.000பேர் வரை கூடினரெனக் கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும், ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிக்கன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்றவேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக் கூடாது என்பதோடு, துக்கத்தை அனுஷ்டிக்கப்போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயக மயப்படுத்தவேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும், இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக்கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அந்தக்கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும், அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அந்தக்கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது. தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது. ஆனாலும், தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருகிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி றொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை, மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புலனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபோல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவுநிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்கமுடியாத அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை உருவாகி வருகிறதா? தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்கவேண்டும் குழப்பவேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு "ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள்". தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இருவேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான். இந்த இடத்தில் இதைப்பற்றிக் கதைக்கவேண்டும். ஏனென்றால், நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக்காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப்பற்றிப் பேசமுடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப்போனதன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன. இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு.

ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்யமுடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ் மக்களை முழுமையாகத் தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது, தமிழ்க் கட்சிகள்.

இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியற் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்கவைத்துவிடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்படமுடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறிவிடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்து வரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ்க் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான். எல்லோருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத்திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது. குடிமக்கள் சமூகமும் கிடையாது. கட்சிக் கூட்டுக்களும் கிடையாது. அதனால் கடந்த 14ஆண்டுகளாக தமிழ்மக்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறிக்கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக்கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப்போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்கள - பௌத்த மயமாக்கல் நிலப்பறிப்பு பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது தமிழ்மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்துவருவது இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது...போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை. அந்த வெற்றிடத்தில்தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத்தன்மைமிக்க ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாத மக்களாகத் தமிழ்மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலைத் தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு - கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்காலகட்டத்தில் அதுதொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி, கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த்தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்தவேண்டும். பலப்படுத்தவேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.

தமிழ் மக்கள் வடக்கு - கிழக்காக, கட்சியாக , பொதுக் கட்டமைப்பாக, சாதியாக , சமயமாக சிதறிக்கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக்கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது. தமிழ் மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பதுதான் கடந்த 14 ஆண்டுகால அனுபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.நிக்ஸன்

# இந்திய - இலங்கை வர்த்தக உறவை சீர்படுத்த முயற்சி



## சீனாவை விலக்கி வடக்கு - கிழக்கில் புதுடில்லிக்கு முன்னுரிமை

பொருளாதார நெருக்கடிச் சூழலில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிதி போதாது. அத்துடன் அடுத்த கட்ட நிதி தற்போதைக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் மிகக்குறைவு. இதனை உணர்ந்துகொண்ட இலங்கை அரசாங்கம், இந்தியாவின் தயவுடன் இந்திய - இலங்கை வர்த்தக உறவுகளை மீளவும் புதுப்பிப்பது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கின்றது.

வடக்கு - கிழக்கில் இந்திய திட்டங்களுக்கு முன்னுரிமை என்ற வியூகத்துடன் இந்தியாவுடனான வர்த்தக உறவை விரிவுபடுத்தும் ஏற்பாடுகள் வகுக்கப்படுகின்றன. ரணிலின் புதுடில்லிப் பயணம் இதற்குப் பதில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ப மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, முன்னாள் பிரதி ஆணையாளர் டபிள்யூ.ஏ.விஜயரட்ண, உள்ளிட்ட பொருளியல் நிபுணர்களிடம் ஆலோசனைகள் பெறப்படுகின்றன.

ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில், ஜனாதிபதி ரணில் இந்தியாவைக் கடந்து அமெரிக்க - சீன அரசுகளுடன் நேரடியாகக் கையாள முற்படும் நகர்வுகளில் புதுடில்லிக்கு அதிருப்தி உண்டு. அத்துடன் கொழும்பு போர்ட் சிற்றித் திட்டத்தை மையமாகக் கொண்டு சீனாவுக்குரிய முக்கியமான காரியம் ஒன்றை ரணில் கடந்த வாரம் செய்திருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் முதுகெலும்பான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இலங்கை வெளிப்படுத்தும் மறுதாக்கங்கள் இந்தியாவுக்கு ஒத்துவரக்கூடியவையல்ல. இதன் பின்னணியிலேயே இந்தியாவும் இலங்கையுடன் சில உத்திகளைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. குறிப்பாக இலங்கையின் எதிர்பார்ப்புகள் விருப்பங்கள் போன்றவற்றுக்கு ஏற்ப வர்த்தகச் செயற்பாடுகளில் மீண்டும் சில இலகுவான நிபந்தனைகளை இந்தியா விதிப்பதற்குரிய ஏது நிலைகள் தென்படுகின்றன. அதனையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த ரணில் முற்படுகிறார்.

2015 இல் பதவியில் இருந்த மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் போது எட்கா (Economic and Technology Cooperative Agreement ETCA) எனப்படும் முக்கியமான வர்த்தக ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதை ரணில் தவிர்த்திருந்தார்.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது சீபா (Comprehensive Economic Partnership Agreement CEPA) கைச்சாத்திடப்படவில்லை. 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கமும் அதனைப் புறக்கணித்திருந்தது. இந்த இரு ஒப்பந்த விவகாரங்களில் இலங்கையிடம் தோல்வி கண்ட இந்தியா, 2020 இல் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அது குறித்த பேச்சுக்களை மீளவும் முன்னெடுத்திருந்தது. ஆனால் உரிய பயன் கிடைக்கவில்லை.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோது 1998 டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தம் (IndiaSri Lanka Free Trade Agreement ISFTA) முக்கியமானதென்றும் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததாகவும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆணையாளர் டபிள்யூ. ஏ விஜயவர்த்தன பிற். எல்கே (www.ft.lk) என்ற ஆங்கில இணையத்தளத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது எழுதிய கட்டுரையில் விபரிக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய முறையில் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை மேற்கொண்டிருந்தால், தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்ற தொனியில் அந்தக் கட்டுரையில் அவர் இடித்துரைக்கிறார். இந்த ஒப்பந்தம் தற்போதும் செயற்படுகின்றது. ஆனாலும் ஒப்பந்தத்துக்குரிய உறுதிமொழிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் விஜயவர்த்தன தனது கட்டுரையில் பரிந்துரைத்திருந்தார்.

இந்திய - இலங்கை பிராந்திய மற்றும் பலதரப்பு மட்டங்களில் அபிவிருத்தி செய்து ஊக்குவித்தல், மொத்த உற்பத்தி, வருமானம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். வேலைவாய்ப்புகள் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்குத் தீவிரமாக பங்களிப்புச் செய்தல் ஆகியவை அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான விடயங்கள். இதன் பிரகாரம் தற்போது ஜனாதிபதி ரணில் மீண்டும் இந்தியாவுடன் வர்த்தகச் செயற்பாடுகள் பற்றிய பேச்சை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவின் எட்கா மற்றும் சீபா உடன்படிக்கை போன்றவற்றை வேறு வடிவங்களில் செயற்படுத்துவது குறித்தே ஆலோசிப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலிலும் ரஷ்ய - உக்ரைன் போரினால் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளின் பின்னணியிலும் மீண்டும் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை உருவாக்கி விரிவுபடுத்த ரணில் முற்பட்டிருக்கிறார்.

இந்திய ரூபாவை சர்வதேச வர்த்தகத்தில் முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய சாதகமான நிலை தென்படுவதாலும் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயச் சூழல் ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும் கூற முடியும். இந்தப் பின்னணியில் இலங்கை மற்றும் இந்தியாவின் வர்த்தக வசதிகளின் நிலையை மதிப்பிடுவது, இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் செய்யும் நடைமுறைகள், ஒழுங்குமுறைகள், தொடர்புடைய ஆவணங்களில் உள்ள இடையூறுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து தற்போது புதிய ஆலோசனைகள் தயாரிக்கப்படுகின்றன.

அதேநேரம் இந்தியா தொடர்பான சிங்கள மக்களின் அச்ச உணர்வுகள் குறித்து, இந்தியாவுடன் வர்த்தக உறவுகளைக் குறிப்பாக தொழில்நுட்பத் துறைகளில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்ற விடயங்களில் இலங்கைத் தொழிற் சங்கச் சங்கங்கள், இலங்கை மருத்துவர் சங்கம் ஆகியவற்றின் எதிர்ப்புகளைச் சமாளிப்பது அல்லது புரிய வைப்பது போன்ற அணுகுமுறைகளைக் கையாள சில உத்திகள் வகுக்கப்படுகின்றன. எதிர்க்கட்சிகளைச் சமாளிப்பது பிரச்சினையல்ல. ஏனெனில் இது பொருளாதார மீட்சிக்குரிய இராஜதந்திரிகள் மட்டத்திலான நகர்வு

அதேவேளை இந்தியா இப்போது வல்லரசு என்ற தோற்றத்தைக் காண்பித்துவருகிறது. அத்துடன் தமிழ் நாடும் பெரிய மாநிலமாகும். இதன் காரணமாக சிங்கள மக்களுக்கு இந்தியா பற்றிய அச்சம் ஒன்று உள்ளது. குறிப்பாக 'ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா 1983 இல் இருந்து மூக்கை நுழைக்கிறது, சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கடும் அழுத்தம் கொடுக்கிறது' என்ற அதிருப்தியும் சந்தேகங்களும் சிங்கள மக்களிடமும் சிங்கள ஊடகங்களிடமும் உண்டு.

இலங்கையில் இந்திய அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிராக சிங்கள மக்களும் பௌத்த குருமாரும் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சிங்கள மக்களின் இந்தியா தொடர்பான விருப்பமின்மையை அறிந்துகொள்ளச் சிறந்த உதாரணங்களாகும்.

ஆனால் இவ்வாறான கடும் எதிர்ப்புகளினால் இந்தியாவுடனான வர்த்தக உறவுகள் பாதிக்கப்பட்டு இந்திய- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக வெற்றியடையவில்லை என்று விஜயரட்ணா தனது கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தியாவுடனான வர்த்தக உறவுகள் மேம்படாமைக்கு இலங்கை மருத்துவர் சங்கம் ,சில தொழிற்சங்க அமைப்புகள், இடதுசாரிச் சிங்கள அமைப்புகள் போன்றவற்றின் மீது விஜயவர்த்தனா குற்றம் சுமத்துகிறார்.

குறுகிய அரசியல் சிந்தனைகள் மற்றும் இந்தியா குறித்த தேவையற்ற அச்சங்கள் காரணமாகவே சீபா மற்றும் எட்கா போன்ற சிறந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தி விளக்கமளிக்கிறார்.

இந்த நிலையில் மீண்டும் இந்தியாவுடன் குறித்த ஒப்பந்தங்களை வேறு வடிவங்களில் மாற்றியமைத்து வர்த்தக உறவை மேம்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையில் ரணில் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பின்புலத்தில் இலங்கையில் இந்திய முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துதல் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட இந்திய வர்த்தக முதலீட்டாளர்களைச் சமீபத்தில் புதுடில்லியில் சந்தித்து மொரகொட இது குறித்துப் பேசியிருக்கிறார்.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் உணவு, எரிபொருள், மருந்துக் கொள்வனவு உள்ளிட்டவற்றுக்காக சுமார் நான்கு பில்லியன் டொலர் கடனுதவியை இந்தியா கடந்த ஆண்டு வழங்கியிருந்தது. ஆகவே இலங்கையின் தற்போதைய பொருளாதாரப் பலவீனத்தை இந்தியா மேலும் தமக்குச் சாதகமாக மேலும் பயன்படுத்தலாம்.

அதேநேரம் சிங்கள மக்கள் விரும்புவது போன்று ஈழத்தமிழர் விவகாரம் பற்றி அழுத்தம் கொடுக்காமல், இந்தியாவின் புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் மாத்திரம் புதுடில்லி செயற்படுமானால் சிலவேளை இந்தியா நோக்கிய பார்வையில் ரணில் போன்ற சிங்கள ஆட்சியாளர்களிடம் மாற்றங்களும் ஏற்படலாம்.

அத்துடன் அமெரிக்க - சீன அரசுகளுடன் சிறிய நாடு என்ற நோக்கில் நேரடியாகவும், அதேநேரம் இந்தியாவுக்கும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கும் ஆபத்தில்லாமல் இலங்கை தனது பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்தால், புதுடில்லிக்கு அதில் பிரச்சினையும் இருக்காது.

ஏனெனில் ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் சிறிய நாடுகளையும் அரவணைத்துச் செல்லவேண்டும் அல்லது சிறிய நாடுகளின் விருப்பங்களுக்கு உடன்படவேண்டும் என்ற அரசியல் பொருளாதாரப் பின்னணிக்குள் தற்போது வல்லரசு நாடுகள் சிக்குண்டுள்ளன.

ஆகவே இந்த நெருக்கடிச் சூழலை குறிப்பாக இந்தியாவின் சிக்கலை ரணில் நன்கு அவதானிக்கக்கூடியவர். அதற்கு ஏற்ப இந்தியாவை அணுகினால் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குரிய தீர்வை எட்டமுடியும் என்று ரணில் நம்பக்கூடும். ரணில் அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியாதுபோனாலும், வரவுள்ள சிங்கள ஆட்சியாளர்களும் ரணில் தற்போது இந்தியாவை நோக்கி வகுக்கும் வியூகத்தைத் தொடரக்கூடிய நிலையே உண்டு.

அதேபோன்று இந்தியாவில் மோடியின் ஆட்சி மாறி காங்கிரஸ் பதவியேற்றாலும் இந்த வியூகம் தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அதற்குரிய முறையிலேயே இந்திய இலங்கை வர்த்தக ஏற்பாடுகள் இராஜதந்திரிகள் மட்டத்தில் வகுக்கப்படுகின்றன. எனவே 2000 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த சர்வதேசப் புவிசார் அரசியல் பொருளாதாரக் குழப்பங்களைப் பயன்படுத்திக் குறிப்பாக அமெரிக்க இந்திய அரசுகளின் ஒத்துழைப்புடன் 2009 இல் மஹிந்த போரை இல்லாதொழித்தார். ரஷ்ய- உக்ரைன் போரினால் தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேசக் குழப்பங்களைப் பயன்படுத்தி இலங்கையின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்க, ரணில் 2023 இல் முற்பட்டுள்ளார். அவ்வாறு பொருளாதாரத்தை மீட்கும்போது, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரம் இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் அடங்கிவிடவேண்டும் என்பதை மையமாகக் கொண்டே ரணில் தனது உத்தியை வகுக்கிறார். இந்த உத்தி ஏனைய சிங்கள ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும். இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஏற்புடையது.

எனவே தமிழ்த்தேசியக் கட்சிகளின் 2009 க்குப் பின்னரான பலவீனமான அரசியல் போக்குகள் இந்தியாவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நல்ல வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றன. ஆகவே இந்தியாவுடன் தொப்புள்கொடி உறவு உண்டெனக் அடிக்கடி மார்தட்டும் தமிழ்த்தேசியக் கட்சிகள், தமது கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் சீரான அரசியல் திட்டம் ஒன்றைக் கூட்டாக வகுக்கவேண்டும்.

அதற்காகப் பதின்மூன்றை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கேட்பது அரசியல் வேடிக்கை. அதேபோன்று இந்துத் தமிழீழத்தை இந்தியா பெற்றுத் தருமென நம்புவதும் தற்கொலைக்கு ஒப்பானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

## 1932 மே 04

* தமிழ் உறுப்பினர்களின் சட்டசபையைப் பகிஷ்கரிக்கும் தீர்மானத்தின் ஒரு வருடப் பூர்த்தி யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. முற்றவெளி நோக்கி ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது இந்த ஊர்வலத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் முக்கியமான பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர்.

## 1932 மே

* யாழ்ப்பாணத்தின் முதல் பெண் பட்டதாரி
* யாழ்ப்பாணம் சப்பல் வீதியைச்சேர்ந்த செல்வி. செல்லையா சென்னை பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்தார். இவர் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியாவார்.

## 1932 ஜுன்

* நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.ஆறுமுகம் லண்டனிலிருந்து நாடு திரும்பினார். இவர் மான்செஸ்டர் நீர் கூட்டுத்தாபனத்தில் உதவி பொறியியலாளராக கடமையாற்றியுள்ளதுடன் பிரிட்டிஷ் நீர் பொறியியலாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். ஆறுமுகம் திட்டம் என அழைக்கப்படும் தொண்டைமானாறு கடல் நீரேரி திட்டத்தை சிபார்சு செய்த ஆறுமுகம் இவராகத்தான் இருக்கவேண்டும்.

## 1932 ஜுன் 19

* புங்குடுதீவுமலாயா ஐக்கிய நாணய சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் கோலாலம்பூர் விவேகானந்த மண்டபத்தில் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. திரு பசுபதிப்பிள்ளை தலைவராகவும் திரு.அம்பலவாணர் உபதலைவராகவும், திரு.பொன்னம்பலம் செயலாளராகவும், திரு சண்முகம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.
* வட்டுக்கோட்டைமலாயா சங்கத்தின் ஆறாவது ஆண்டுபொதுக்கூட்டம் கோலாலம்பூர் தமிழ்ச்சங்க மண்டபத்தில் 19 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது. திரு .சண்முகம் தலைவராகவும், திரு.கந்தையா உப தலைவராகவும், திரு . பொன்னையா செயலாளராகவும் , திரு. முத்தையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 1933 ஏப்ரல்

* யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் பாடசாலைகளில் கட்டாயமாகத் தமிழும் சிங்களமும் கற்பிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
* கந்தரோடையைச்சேர்ந்த பொறியியலாளர் நடராஜா பம்பாய் டாட்டா நிறுவனத்தில் பொறியியலாளராக நியமனம் பெற்றார்.
* யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் சிறந்த தேசிய கீதம் ஒன்றை இயற்றித் தருபவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும் என அறிவித்தது. இந்த தேசியகீதம் இந்திய தேசியகீதத்தைப் போன்று ஒற்றுமையை வலியுறுத்துவதாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

## 1933 செப்ரெம்பர்

* கூட்டுறவுத்துறையில் யாழ்ப்பாணம் முன்மாதிரியாக விளங்குகிறது என ஆளுநர் பாராட்டு.
* வடமாகாண கூட்டுறவுத்துறை ஏனைய பிரதேசங்களிலுள்ள கூட்டுறவுத்துறையை விட சிறப்பாகச் செயற்படுகிறது என ஆளுநரின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனைய பிரதேசங்களின் கூட்டுறவுத்துறை வருமானத்துடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தின் வருமானம் இலங்கையின் மொத்த வருமானத்தின் அரைவாசிக்கும் அதிகம் என ஆளுநரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 1933 ஒக்ரோபர்

* தங்கராஜா சரவணமுத்து கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலாளராகப் பட்டம் பெற்றார்.

## 1933 நவம்பர்

* அரசாங்க அதிபர் றொட்றிகோ வீதியோரங்களிலுள்ள சிறிய கோயில்களை அகற்றுமாறு உத்தரவிட்டார்.

## 1933 டிசெம்பர் 19

* உடுவிலைச்சேர்ந்த பொன்னனின் மனைவி இணுவில் மக்லியொட் மருத்துவமனையில் நான்கு பெண் குழந்தைகளைப் பிரசவித்தார்.

## 1933 டிசெம்பர் 21

* தீவுப்பகுதிக்கான படகுச்சேவை ஆரம்பம்.
* யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதிகளுக்குச் செல்வதற்கான படகுச்சேவை குருநகர் இறங்குதுறையில் விவசாய அமைச்சர் டி.எஸ்.சேனநாயக்காவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தீவகப் படகுப் போக்குவரத்துச் சேவைச் சங்கம் 11,000 ரூபாவுக்கு இந்தப்படகை கொள்வனவு செய்திருந்தது. இந்தப்படகில் 40 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடியதாக இருந்தது.. இந்தப்படகுக்கு நாக பூஷணி எனப் பெயர் சூட்டப்பட்டது.
* கோலாலம்பூரில் உள்ள கணக்காய்வு அலுவலகத்தில் எழுதுநராக கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஹென்றி, மலாயாவின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டார் இவருக்கு 28,617 வாக்குகளும், இவருடன் போட்டியிட்ட சீனருக்கு 27,923 வாக்குகளும் கிடைத்தன. இங்கிலாந்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கும் ஸ்கொட்லாந்துக்குமிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்தின் சார்பில் விளையாடுவதற்காக இவர் மலாயாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். ஹென்றி அச்சுவேலியைச்சேர்ந்த தபாலதிபர் அப்புக்குட்டியின் மகனாவார்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
21 மே 2023



# முன்றில் 9

○ இயல்வாணன்

"வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம் - கடல்
வீசுகின்ற காற்றில் உப்பின் ஈரம்
தள்ளிவலை ஏற்றி வள்ளம் போகும் - மீன்
அள்ளிவர நீண்டநேரம் ஆகும்"

ஒரு காலத்தில் இந்தப் பாடலை முணுமுணுக்காத வாய்கள் இல்லையெனலாம். புதுவை இரத்தினதுரையின் உணர்வுறும் வரிகளுக்கு வள்ளத்தில் அமர்ந்து அலைகளில் தவழ்ந்து பயணம் போவது போன்ற அனுபவத்தைத் தரக்கூடியதாக இந்தப் பாடலை இசையமைத்தவர் கண்ணன் என அழைக்கப்பட்ட கோபாலகிருஸ்ணன்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பிரதேசத்தில் 23.03.1943இல் பிறந்த அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்து பதினொராந் தரத்தை நிறைவு செய்த பின்னர் இசைத்துறைக்குள் நுழைந்து கொண்டார். இவரது தந்தையார் முத்துக்குமாரு ஒரு தபேலா வாத்தியக் கலைஞராகவும், ஹார்மோனியம் வாசிப்பவராகவும் விளங்கினார். அதனால் அவரே இசைத்துறையில் இவரை வளர்த்து விட்டார். ஆரம்ப இசைப்பயிற்சியை புலவர் சண்முகரத்தினத்திடம் பெற்றுக் கொண்டார். பின்னர் சிதம்பரம் கிருஸ்ணமூர்த்தி, வேலணை சங்கீதபூஸ்ஷணம் இராஜலிங்கம், நாதஸ்வர வித்துவான் கோவிந்தபிள்ளை ஆகியோரிடம் முறையான இசைப்பயிற்சியையும் பெற்றுக் கொண்டார்.

16 வயதில் மேடையேறிய அவர் ஆரம்பத்தில் கோவில் திருவிழாக்கள், திருமண விழாக்களில் இசைக்கச்சேரிகளில் வாத்தியக் கலைஞராகப் பங்குபற்றினார். 1960ஆம் ஆண்டில் ஒரு இசைக்குழுவை உருவாக்கினார். அந்த நேரத்தில் சில காலம் தென்னிந்தியக் கலைஞர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே, உள்ளூர்க் கலைஞர்கள் பிரபலம் பெற்றனர். இந்த இசைக்குழுவும் மெல்ல மெல்லப் பிரபலமாகவே பெயர் சூட்டப்படாமலே மக்களால் "கண்ணன் கோஷ்டி" என அழைக்கப்பட்டது. வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தினால் மேடையேற்றப்பட்ட நாடகங்களுக்கும் இசையமைத்தார். 60 களில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த தினகரன் விழாவின் ஒரு பகுதியாக வர்த்தக ஊர்திப் பவனி இடம்பெற்றது. அதில் கண்ணன் இசைக்குழுவும் பவனியாக ஊர்தியில் இசைநிகழ்ச்சியை நடத்தியது. இதற்கு முதற்பரிசு கிடைத்தது. இது குழுவை உற்சாகப்படுத்தியது. சில பாடல்க்ளை இசையமைத்து மேடைகளில் பாடினர்.

தினகரன் விழாவில் அறிவிப்பாளராகக் கடமையாற்றிய இலங்கை வானொலியின் அறிவிப்பாளர் நடராஜா வானொலிக்காக மெல்லிசை நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரித்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். அதையேற்று கொழும்பு சென்று நிகழ்ச்சிக்கான பாடல்களுக்கு இசையமைத்தார். மாதாமாதம் ரயிலில் பயணித்து, ஒரு வாரம் தங்கி நின்று இசையமைத்து ஒலிப்பதிவு செய்த பின்னர் யாழ்ப்பாணம் திரும்புவதாக அவரது ஆரம்ப காலம் இருந்தது. பின்னர் கொழும்பிலேயே தங்கி நின்று இசையமைத்தார்.

அந்தக் காலத்தில் நேசம் என்பவருடன் இணைந்து கண்ணன்நேசம் இசைக்குழுவை உருவாக்கி கொழும்பில் இசைநிகழ்ச்சிகளையும் நடத்தினார். மெல்லிசை, பொப்பிசை, றொக்கிசை, திரையிசை, பக்திப் பாடல்கள் என எல்லாமே கண்ணன்நேசம் இசைக்குழுவால் மேடைகளில் இசைக்கப்பட்டன. இதற்கென இவர்களால் உருவாக்கப்பட்ட பாடல்களும் இசையமைக்கப்பட்டன.

அந்த வேளையில்தான் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தெய்வம் தந்த வீடு, கோமாளிகள், ஏமாளிகள் ஆகிய படங்களுக்கு இசையமைத்தார். தெய்வம் தந்த வீடு படத்தில் தவில் வித்துவானாகவும் நடித்தார். கோமாளிகள் படத்தில் வந்த "சம்மதமா சொல்லித் தரவா என் உள்ளம் உன்னோடுதான்" என்ற சில்லையூர் செல்வராசன் - கமலினி நடித்த, முத்தழகுவும் கலாவதியும் பாடிய பாடல் அக்காலத்தில் இலங்கை முழுவதும் பிரபலம் பெற்றிருந்தது. நீலாவணன் எழுதிய "ஓ..வண்டிக்காரா"பாடலும் இவரால் இசையமைத்துப் பிரபலமான இன்னொரு பாடலாகும்.

1983 இனக் கலவரத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்த அவர் நாடகங்களுக்கு இசையமைத்தார். குழந்தை ம.சண்முகலிங்கம், சிதம்பரநாதன் ஆகியோரின் அனேக நாடகங்களுக்கு இவரே இசையமைத்தார். அத்துடன் தாசீஸியஸ், பாலேந்திரா, மௌனகுரு போன்றோரின் நாடகங்களுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் இறுதி யாண்டுப் பரீட்சையின் ஒரு பகுதியாக ஆற்றுகை செய்யப்படும் நாடகங்களுக்கும் இசையமைத்தார்.

1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து கண்ணனின் பயணம் விடுதலைப் பாடல்களுடன் ஆரம்பித்தது. அப்போது தமிழீழ இசைச் சாம்ராஜ்யத்தின் கொடுமுடியாக அவர் பார்க்கப்பட்டார். பலநூறு பாடல்கள் அக்காலத்தில் இவரது தனித்துவமான இசையில் வெளிவந்தன. நெய்தல், கரும்புலிகள் ஆகிய இசைநாடாக்களின் பாடல்கள் அக்காலத்தில் பெரும் உணர்வெழுச்சியோடு பாடப்பட்டன. புதுவை இரத்தினதுரை - கண்ணன் கூட்டணியில் மலர்ந்த பாடல்கள் இன்றும் நிலைத்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ஆம் திகதி பாடப்படும் "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே" என்ற துயிலெழுச்சிப் பாடல் ஒவ்வொருவரையும் உறையச் செய்யும் உயிர்ப்பான இசைக்கோர்வையாலானதாகும். அது கண்ணனின் இசையில் மலர்ந்தது. இதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் இசைவாணர் பட்டமும், தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கலாபூஷணம் முதலான பல பட்டங்களை அவர் பெற்றுக் கொண்ட போதும் இசைவாணர் கண்ணன் என்பதே நிலைத்து விட்ட பட்டமாகும். சமாதான காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து வந்து கிளிநொச்சியில் திரைப்படப் பயிற்சியை வழங்கிய உதிரிப்புக்கள் மகேந்திரனின் வழிகாட்டலில் ஆதவன் திரைப்படப் பயிற்சிக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட 1996 என்ற குறும்படத்துக்கும் இவரே இசையமைத்துள்ளார்.

அண்மையில் 80 அகவையை நிறைவு செய்து அமுதவிழாக் கண்ட இசைவாணர் கண்ணன் தற்போது இளையோருக்கான இசைப்பயிற்சியினை வழங்கி வருகின்றார். அவரது பிள்ளைகளான சத்தியன், சாயிதர்சன் ஆகியோர் இசையமைப்பாளர்களாக மிளிர்ந்து வருவதுடன் பேத்தி பவதாயிணி நாகராஜா தமிழ்நாட்டின் 'ஸீ' தமிழ் தொலைக்காட்சியின்'சரிகமப 'இசைநிகழ்ச்சியில் பாடி அசத்திப் பிரபல்யம் பெற்றுள்ளார். இசைவாணரின் பாடல்கள் சாகாவரம் பெற்றவை. அவை சுவைஞர் உதடுகளில் என்றும் நர்த்தனமாடும்.



# பெருச்சாளி வருகுதே, பராக்... பராக்... பராக்...!

○ குருமன்காட்டாள் வன்னிகா

'ஓல்ட் பார்க்கில' பாழடைஞ்ச கட்டடங்கள் ஒண்டு ரண்டுதான் மிஞ்சிக் கிடக்கு.
மரங்களில அங்கின வவ்வாலுகள் தொங்கிக்கொண்டு தூங்கும்.
அதுக்குள்ள ரண்டு மூண்டு வெள்ளைக் கட்டடங்கள் கிடக்குது.
'தொலை நகரில' இருக்கிற 'அதியுத்தம அணிலொண்டு' ( முத்திப் பழுத்த வயசுக்கார அணில்) . 'பென்னாம்' பெரிய பெருச்சாளிக்கு பென்னாம் பெரிய பதவியைக் குடுத்து 'ஓல்ட் பாக்கின்ரை' வெள்ளைக் கட்டடத்துக்கு மாசத்திலை ஒருக்காப் போய்வரச் சொல்லியிருக்கு.
அது மிக மோசமான மோசடிப் பெருச்சாளி !
மாசத்தில ஒருக்கா வந்தாலே போதும்...
வடக்கை முழு- சா விறாண்டி வெட்டி அரிச்சுக் கொட்டிப் போடும்.
பெருச்சாளி லிப்ஸ்ரிக் அடிச்சுக்கொண்டு வரும் பாருங்கோ. தூரத்தில நிண்டு பாத்தா அண்டப் பெருச்சாளி, தவக்கை மாதிரியும் இருக்கும்.
மூண்டு வருசத்துக்கு முதலும் 'காட்டாச் சிங்கம்' இதே பெருச்சாளியைப் பிடிச்சு இஞ்சை அனுப்பினது.அந்த நேரம் அங்கினேக்கை இருந்த கள்ள நரிக் கிழவங்கள் ஒண்டு ரண்டு பேர் சேட்டும் லோஞ்சும் போட்டு சப்பாத்தும் போட்டு ரையும் கட்டினாங்கள் பாருங்கோ.
பெருச்சாளி வடக்கு பைலுகளை அரிக்கத் தொடங்கின உடனை நரிக் கிழவர் காவிக் காவிக் கொண்டுபோய் தூக்கித் தூக்கிக் குடுத்துக் களைச்சுப் போனாங்கள்...
இந்தப் பெருச்சாளி முந்தி 'கவனியாவில' டியூட்டி செய்யேக்க நிறையக் காணியளை விறாண்டி அதுகளை வளைச்சு தன்ர வளையாக்கினது எல்லாருக்கும் ஞாபகம் இருக்கும்.
சின்னச் சின்னக் குட்டிக் கள்ள எலியளும் விறாண்டலுக்குச் சப்போட்டாம் !
ஆனால் ஏழையளின்ரை காணியள்....?
பிறகு பெருச்சாளி 'வட்டக்கிளப்பில' டியூட்டில இருக்கேக்கை காசு நல்லா விறாண்டி நாலைஞ்சு 'லக்சறி' மாளிகை வீடுகள் 'தொலை நகரில' வாங்கினதாம்.
போன முறை 'ஓல்ட் பாக்குக்கு' வந்து போகேக்கை 'முன்னாரிலையும்' பெருச்சாளி காணி காணியாய் விறாண்டத் தொடங்கினதாம்.
இந்த முறை போன முறை போல இல்லாம, ஒரு சொட்டும் பயமில்லாம அரிக்க வேண்டியதெல்லாம் அரிச்சு, விறாண்ட வேண்டியதெல்லாம் விறாண்டிக் குவிச்சு அள்ளுறதுதான் பெருச்சாளியின்ரை திட்டம்.
பெருச்சாளி சிலவேளை கொஞ்சக் காலத்துக்கு ஓல்ட் பார்க்குக்கு இடைக்கிடை வந்து போகும். அது குறுகின காலமெண்டாலும் விரைவா வேலையை முடிக்கும் போலத்தான் தெரியுது.
இன்னொரு கொடுமை, போனமுறை ஓல்ட் பார்க்குக்கு பெருச்சாளி வந்து போகேக்கை தான் வடக்கிலை போதைவஸ்துக் கடத்தலும் போதை யாவாரியளும் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கினவங்கள்.போதையாலை கல்வி, தொழில் எல்லாம் இழந்து எங்கடை பிள்ளையள் அழியுது. எல்லாவிடமும் கிரிமினல் குற்றங்கள்.சட்டமொழுங்கெல்லாம் துலையுது.
அது மட்டுமில்லை, வடக்கின்ரை சகலமட்ட நிருவாகங்களும் சீரழியும்.
வடக்கில சில கிழட்டுச் சுண்டெலிகளும் அகிழான்களும் பெருச்சாளியிட்டை போய் அணைஞ்சிடுங்கள்.
வடக்காரே வடிவாக் கவனியுங்கோ. பெருச்சாளி வந்திட்டால்.கேட்பார் மேய்ப்பார் இல்லாமல் சீரழிவு நடக்கும்.
மிக மோசமான மோசடிப் பெருச்சாளி வருது.....கவனம்....!
ஊழல் மோசடியாலதான் நாடு வங்குரோத்துக்குள்ள போனது. அதுதெரிந்தும் அணில் மோட்டு வேலை செய்யுது. அணிலுக்கு பெருச்சாளியை வடக்குக்குபோடச் சொல்லி கப்புட்ட 'காக்கா' தான் அழுத்தம் குடுத்ததாம்.
அந்தோ பரிதாபம்... வடக்கின் நிலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org